**அரக்கோணம் நகராட்சி**
**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

**கூட்ட எண்.83** **நாள்.28.12.2021**

பொருள் சாதாரண மன்ற கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.31.12.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10,00 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக,

------

அரக்கோணம் நகராட்சி 31.12.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

**ஆணையர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண்.01**

நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்/2021 மற்றும் நவம்பர்/2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண்.02**

அரக்கோணம் நகராட்சியில் கொரானா–19 நோய் தடுப்பு பணிக்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் நோய் தடுப்பு பொருட்கள் குறைந்த அளவே இருப்பு உள்ளதால் கொரானா 19 நோய் தடுப்பு நடவடிக்கைகள் சுணக்கம் இன்றி செய்து முடிக்கவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10608/2021/H2 நாள்.10.11.2021 ல் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 210 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (M1) துறை நாள் 27.04.2020 மற்றும் அரசாணை எண் 695 சுகாதாரம் மற்றும் குடும்ப (DM-II) நலத்துறை நாள் 04.06.2021 ல் நிர்ணயம் செய்துள்ள விலையில் உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளிகளை பெற்று கீழ்காணும் விவரப்படி கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.5.00லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கொரானா 19 நோய் தடுப்பு பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Hydrated Lime Powder | 10000 கிலோ |
| 2 | Bleaching Powder | 2500 கிலோ |
| 3 | Lysol | 100 லிட்டர் |
| 4 | Surgical Mask 3 Layer | 14000 Nos |
| 5 | Hand Sanitizer | 150 லிட்டர் |
| 7 | Gloves | 3000 Nos |

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(ந.க.எண் 704எச்1/2022)</u>

**பொருள் எண்.03**

இந்நகராட்சியில் கொரானா–19 நோய் தடுப்பு பணிக்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் நோய் தடுப்பு பொருட்கள் கொள்முதல் செய்து கொள்ள உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | கொரானா 19 நோய் தடுப்பு பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | Evergreen fair Trade Private Ltd, Chennai Per one Unit Rate (Exclusive of GST Rs.) | KM Polypacks, Sivakasi Per one Unit Rate (Exclusive of GST Rs.) | Madhavan bags, Sivakasi Per one Unit Rate (Exclusive of GST Rs.) |
|---|---|---|---|---|---|
| 1 | Hydrated Lime Powder | 10000 கிலோ | 9 | 10 | 12 |
| 2 | Bleaching Powder | 2500 கிலோ | 40 | 42 | 45 |
| 3 | Lysol | 100 லிட்டர் | 200 | 205 | 210 |
| 4 | Surgical Mask 3 Layer | 14000 Nos | 4 | 5 | 8 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | Hand Sanitizer | 150 லிட்டர் | 500 | 505 | 510 |
| 7 | Gloves | 3000 Nos | 15 | 16 | 20 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **EVERGREEN FAIR TRADE PRIVATE LTD, CHENNAI** நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 704/எச்1/2022)**

## பொருள் எண்.04

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு நகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டு 01.07.2021 முதல் 31.12.2021 வரை 35 DBC பணியாளர்களை வைத்து டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 01.01.2022 முதல் 31.03.2022 வரை ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வரும் இன்பம் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய இரண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் 35 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1245/எச்1/2019)**

## பொருள் எண்.05

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 113 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் வெளிகொணர்வின் மூலம் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/J3/2018 நாள்:11.12.2018.ல் செயல்முறை ஆணை வழங்கப்பட்டு ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் 2835/2018/எச்1 நாள்: 30.07.2020—ல் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு 01.08.2020 முதல் 31.07.2021 வரை வெளிக்கொணர்வின் மூலம் 195 தூய்மை பணியாளர்களை வழங்க கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 31.07.2021 தேதியுடன் பணி உத்திரவு முடிவடைந்ததால் 01.08.2021 முதல் 30.09.2021 வரை ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தின் மூலம் மேலும் 2 மாதங்களுக்கு வெளிக்கொணர்வு பணியினை புதுபித்து கொள்ள நகரமன்ற அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து 01.10.2021 முதல் 31.12.2021 வரை மீண்டும் 3 மாதங்களுக்கு வெளிக்கொணர்வு பணியினை புதுபித்து கொள்ள நகரமன்ற அனுமதி பெறப்பட்டது. எனவே தற்போது 31.12.2021 தேதியுடன் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி முடிவடைவதாலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தின் 20.12.2021 ஆம் தேதிய சம்மத கடிதத்தின் பேரில் 01.01.2022 முதல் 31.03.2022 வரை 3 மாதங்களுக்கு வெளிக்கொணர்வு பணியினை புதுபித்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டியும் அற்கான தோராய செலவினம் ரூ.81.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:— மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க.எண். 826/2015/எச்1)**

## பொருள் எண்.06

இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2021—2022ம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம்

வாங்கி வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் தகவலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | சீருடை ரகம் (ம) கலர் | அளவு மீ. | கோ ஆப் டெக்ஸ், வேலூர் விலைப்புள்ளி ரூ | TANSIDCO LTD திருமழிசை, விலைப்புள்ளி ரூ |
|---|---|---|---|---|
| 1. | காக்கி பாலியஸ்டர் துணி (Shirt) | 1.75 செ.மீ X 1 செட் | 305.03 | 302.75 |
| 2. | காக்கி பாலியஸ்டர் துணி (Pant) | 1.30 செ.மீ X 1 செட் | 226.59 | 224.9 |
| 3. | காக்கி பாலியஸ்டர் துணி (Pant) | 1.20 செ.மீ X 1 செட் | 209.16 | 207.60 |
| 4. | வெள்ளை பாலியஸ்டர் துணி (Shirt) | 1.75 செ.மீ X 1 செட் | 305.03 | 302.75 |
| 5. | வெள்ளை பாலியஸ்டர் துணி (Pant) | 1.30 செ.மீ X 1 செட் | 226.59 | 224.9 |
| 6. | தலைப்பாகை பச்சை (அ) நீலம் | 2 மீ X 1 செட் | 153.30 | 145 |
| 7. | பச்சை கலர் புடவை | 5.50 மீ X 1 புடவை | 483 | 481 |
| 8. | நீலம் கலர் புடவை | 5.50 மீ X 1 புடவை | 483 | 481 |
| 9. | பச்சை கலர் ஜாக்கெட் | 0.90 செ.மீ X 1 செட் | 72.77 | 89 |
| 10. | நீலம் கலர் ஜாக்கெட் | 0.90 செ.மீ X 1 செட் | 72.77 | 89 |
| 11. | வெள்ளை கலர் புடவை | 5.50 மீ X 1 புடவை | 483 | 481 |
| 12. | காக்கி கலர் புடவை | 5.50 மீ X 1 புடவை | 483 | 481 |
| 13. | வெள்ளை கலர் ஜாக்கெட் | 0.90 செ.மீ X 1 செட் | 72.77 | 89 |
| 14. | காக்கி கலர் ஜாக்கெட் | 0.90 செ.மீ X 1 செட் | 72.77 | 89 |
| 15. | சிமெண்ட் கலர் ஜாக்கெட் | 0.90 செ.மீ X 1 செட் | 72.77 | 89 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **TANSIDCO LTD திருமழிசை,** நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும், வேலை உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தொகை ரூ.2,57,655/– வழங்கவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : அவசரம் அவசியம் கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 1073/எச்1/2021)**

## பொருள் எண்.07

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 44 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களுக்கு (BOV) ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் மூலம் கொள்முதல் செய்ய இயலாத ரூ.1000/– க்கு மேற்பட்ட பழுது நீக்கம் செய்ய தேவையான பேட்டரி மற்றும் இதர உதிரி பாகங்களை கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 08.12.2021 அன்று கீழ்காணும் விவரப்படி மூடி முத்திரையிட்ட வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | Nos | SRI VARI ENTERPRISES ARAKKONAM | SRI SAI RAM ENTERPRISES TIRUVALLUR |
|---|---|---|---|---|
| 1 | THROTTLE WITH (F/R) SWITCH | 01 NO | 1400 | 1200 |
| 2 | DISPLAY SPEDO METER | 01 NO | 1725 | 1500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | KEY SWITCH (ON/OFF) | 01 NO | 402.50 | 350 |
| 4 | CABLE KIT | 01 NO | 1610 | 1400 |
| 5 | MAIN MCB | 01 NO | 460 | 400 |
| 6 | CHARGING CONNECTORS(2 PIN) | 01 NO | 287.50 | 250 |
| 7 | FRONT SUSPENSIONS (02 NOS) | 01 SET | 2875 | 2500 |
| 8 | T HANDLE (43MM) | 01 NO | 805 | 700 |
| 9 | REAR BREAK SHOES (BOTH WHEEL) | 01 SET | 700 | 600 |
| 10 | REAR WHEEL DISK (02 NOS) | 01 SET | 3220 | 2800 |
| 11 | MAIN CONTROLLER (10 AMP ,60 VOLTS) | 01 NO | 8050 | 7000 |
| 12 | BLDC MOTOR WITH SENSOR (1500 WATTS ,60 VOLTS) | 01 NO | 5750 | 5000 |
| 13 | BATTERY (12 VOLT 80 AH X 5 NOS) | 05 NOS | 36800 | 32000 |
| 14 | DC & DC CONVERTOR(60 VOLT X 12 VOLT) | 01 NO | 517.50 | 450 |
| 15 | SPRING PLATE NYLON BUSH(06 NOS) | 01 SET | 115 | 100 |
| 16 | REAR BODY BOLT NUTS WITH PLATES | 01 NO | 460 | 400 |
| 17 | REAR WHEEL BEARINGS DISK(02 NOS) | 01 SET | 805 | 700 |
| 18 | HEAD LIGHT HALOGEN WITH BULB AND HOLDER | 01 NO | 1265 | 1100 |
| 19 | FRONT WHEEL BEARING WITH ROD | 01 NO | 690 | 600 |
| 20 | FRONT WHEEL WITH TUBE, TYRE | 01 NO | 3220 | 2800 |
| 21 | REAR BRAKE DISK(02 NOS) | 01 SET | 2070 | 1800 |
| 22 | SIDE INGINATOR | 01 NO | 345 | 300 |
| 23 | FRONT 12 VOLT HORN | 01 NO | 287.50 | 250 |
| 24 | REWARESS HORN | 01 NO | 287.50 | 250 |
| 25 | PARKING BRAKE HANDLE | 01 NO | 690 | 600 |
| 26 | BRAKE ROD WITH BRAKE PLADLE | 01 NO | 345 | 300 |
| 27 | FRONT HAND BARE ROD(SS) | 01 NO | 862.50 | 750 |
| 28 | REAR BODY SPRING PLATE(02 NOS) | 01 SET | 7360 | 6400 |
| 29 | REAR WHEEL AXLE ROD(02 NOS) | 01 SET | 1840 | 1600 |
| 30 | REAR GEAR BOX | 01 SET | 9200 | 8000 |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ சாய் ராம் எண்டர்பிரைசஸ், அரக்கோணம், நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 672/எச்1/2020)

**பொருள் எண்.08**

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2021-22 ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் பணிகளுக்கு 24.12.2022 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **பொது நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் 120Hp Vertical Turbine Motor பழுது பார்த்து இயக்கி தருதல். | 2.30 | திரு.ஆர்.சண்முகம் | 0.04% | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 2.54% |

**அலுவலக குறிப்பு :- 1. வரிசை எண்.1க்கான பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**பொருள் எண்.09**

இந்நகராட்சியில் அனைத்துப்பிரிவிற்கும் 2021-22ம் ஆண்டிற்கு வாங்கப்பட்ட எழுதுப்பொருட்கள், வெள்ளைத்தாள், டோனர்கள் தீர்ந்துவிட்டதால் பிரிவுகளில் கோரும் பொருட்கள் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளதாலும், தேர்தல் பணி நடைப்பெற்று வருவதால் வெள்ளைத்தாள், டோனர்களின் அவசியம் ஏற்பட்டு உள்ளதாலும் ஆண்டு முடிவு என்பதால் கேட்பு அறிவிப்புகள் எடுப்பதற்கும் வெள்ளைத்தாள் தேவைவப்படுவதால் நிர்வாக நலன் கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு இந்தாண்டின்(2021-22) 4 மாதங்களுக்கான வெள்ளைத்தாள், டோனர்கள் கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கி கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி பொருட்கள் கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கிகொள்ள மன்றம் அனுமதிக்கலாம் நிர்வாக நலன் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று பொருட்கள் வாங்க நடவடிக்கை மேற்க்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1062/2021/B2)

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர் திரு. ஜெகதிஷ் என்பவர் தன்னுடைய மகளின் கல்லூரி படிப்பிற்காக கணினி வாங்கிட முன்பணம் கோரியும் இதனை பிரதிமாதம் ஊதியத்தில் பிடித்தம் செய்துகொள்ளவும்

ரூ.50,000/– வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார் (கணினி முன்பணம் வழங்குவதற்கான அரசாணை எண். 59 நாள்: 16.01.2006 ன் படி) மேற்படி பணியாளர் கோரும் கணினி முன்பணகடன் ரூ.50,000/–ம் வழங்கியும் அதற்கான வட்டியுடன் இதனை பிரதி மாதம் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளவும் இக்கடன் தொகையை பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கு நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண் 0974/2021/பி3]

**பொருள் எண்.11**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (**Outsourcing**) 14 தற்காலிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த **01.03.2021** முதல் **16.02.2022** வரை பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் **17.02.2022** முதல் **31.05.2022** வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.**3.25** லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.12**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் காணொளி காட்சி ஆய்வுக்கூட்ட அறிவுரை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க எண் **2098/2021/**ஆர்**1** நாள் **23.11.2021** மற்றும் இந்நகராட்சி செயல் முறை உத்திரவு கடித ந.க எண் **946/2021/**சி**1–** நாள் **16.12.2021–**ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க வசூலிக்க இயலாத இரட்டை வரிவிதிப்புகளுக்கு சொத்து வரி/தொழில் வரியில் தவறான வரி விதிப்புக்களை(Erroneous Demand) கண்டறிய குழு அமைத்து உத்திரவிட்டதின் பேரில் சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர்கள் தனது குழுவின் தலைவர் மற்றும் குழுவின் மேற்பார்வை அலுவலர்களுடன் சென்று கள ஆய்வு செய்து தவறான கேட்புகளை(Erroneous Demand) கண்டறிய அமைத்த குழுவின் பரிந்துரையின்படி நிர்வாக நலன் கருதி வசூலிக்க இயலாத இனங்களை இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு சொத்துவரி மற்றும் தொழில் வரிக்கான வரிவிதிப்புகளையும் அதற்கான கேட்பு தொகையையும் கணினி கேட்பு பட்டியலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரியினம் | வரிவிதிப்பு எண் | குறிப்பு | தொகை |
|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி | **024/015/00040** | சொத்துவரி விதிப்பு எண் **024/015/00040** என்ற வரிவிதிப்புதாரர் திரு.சண்முகமுதலியார் என்ற பெயரில் உள்ள சொத்து வரி ரத்து செய்யாமல் அதே இடத்தில் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.எனவே பழைய | **248410/–** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரிவிதிப்பினை வரிவஜா செய்யலாம். | |
| 2 | தொழில் வரி | பட்டியலில் உள்ளவாறு 311– எண்ணிக் கை | ஆய்வுக்குழுவின் பரிந்துரையின்படி பட்டியலில் உள்ள 311 எண்ணிக்கை கொண்ட தொழில் வரிவிதிப்புதார்கள் பெயரில் தொழில் வரி விதிக்கப்பட்டு பின்னர் பணிமாறுதல் மற்றும் பணி ஓய்வு காரணமாக சென்று விட்டபடியாலும் பட்டியலில் உள்ள நபர்கள் தற்போது பணிபுரியவில்லை என ஆய்வில் தெரியவருகிறது.எனவே பெயரில் உள்ள தொழில் வரியினை ரத்து செய்யவும் பட்டியலிலுள்ள நபர்களின் கேட்புத்தொகைகளை நிலுவைப்பட்டியலிருந்து நீக்கம் செய்யலாம். | 7125959/– |

**அலுவலக குறிப்பு :-** பட்டியலில் கண்டுள்ள வசூலிக்க இயலாத வரியினங்களையும் அதற்கான கேட்புத் தொகை ஆகியவற்றை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 946 /2021/அ1)

**ஆணையர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**